*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நேருவின் குடும்பத்தைப் பற்றிப் பேசியதற்கு மட்டும் விளக்கம் சொல்லட்டும், (குறுக்கீடு) திரு. சின்னப்பன் மற்றப் பிரச்சினைகள் எல்லாம் வேண்டாம்.

**6. பேரவையில் 29-3-1995 ஆம் நாளன்று உறுப்பினர் திரு. ச. அழகிரி பேசிய ஒரு கருத்தைக் குறிப்பிட்டு எழுந்த விவாதத்தின் போது உறுப்பினர்களைத் தாக்கிய ஓர் உறுப்பினர் பேரவைப் பணிகளின்றும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பெறுவது குறித்தும், பேரவை வளாகத்திலிருந்து உறுப்பினர்களை வெளியேற்றும்போது காவலர்கள் தாக்கப்பட்டது தொடர்பாக நடவடிக்கை எடுப்பது குறித்தும் — மாண்புமிகு பேரவைத் தலைவரின் அறிவிப்பு**

*திரு. கே. கே சின்னப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அன்புத் தலைவர் ராஜிவ் காந்தியைக் கொலை செய்தவர்களோடு, எங்கள் அன்புத் தலைவன் ராஜிவ் காந்தியைக் கொலை செய்வதற்கு இங்கே தமிழகத்தில் மிக ஆதரவாக இருந்து, அவர்களை இங்கே தாராளமாக நடமாடச் செய்து, அவர்களுக்கு உறைவிடம் கொடுத்து, ராஜிவ் காந்தியைக் கொலை செய்த தலைவர்களோடு உறவாடிக் கொண்டிருக்கிறார் ஒரு தலைவர். *(கூச்சல்-குழப்பம்)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இதெல்லாம் வேண்டாம். நீங்கள் சொல்ல வந்த பிரச்சினையைச் சொல்லிமுடியுங்கள். *(கூச்சல்- குழப்பம்)* பாலூர் சம்பத் ஒரு உறுப்பினரைப் பார்த்துக் கை நீட்டிப் பேசுவது சரியல்ல. உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* இது முறையல்ல. பாலூர் சம்பத், ஒரு உறுப்பினரிடத்திலே கைநீட்டுவது சரியல்ல. *(கூச்சல் — குழப்பம்)* திரு. எ. சம்பத், உடனடியாக அவையை விட்டு வெளியேற வேண்டும். *(கூச்சல்-குழப்பம்)* திரு. எ. சம்பத்தை அவையை விட்டு வெளியேற்றவும். *(கூச்சல்-குழப்பம்)* காவலர்கள் சம்பத்தை அவையை விட்டு வெளியேற்றவும். *(கூச்சல்-குழப்பம்)* சம்பத்தை அவையைவிட்டு அப்புறப்படுத்தவும் *(கூச்சல்-குழப்பம்)* ஒரு உறுப்பினரைக் கைநீட்டி அடிப்பது என்பதை அனுமதிக்க முடியாது. *(கூச்சல்-குழப்பம்)* சம்பத் உடனடியாகக் வெளியேறவும். *(கூச்சல்-குழப்பம்)* காவலர்கள் சம்பத்தை அப்புறப்படுத்தவும்.

*(திரு. எ. சம்பத் பேரவைக் காவலர்களால் அவையைவிட்டு வெளியேற்றப்பட்டார்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. எஸ்.எம். கிருஷ்ணன்:** நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருகிறீர்களா?

திரு. சின்னப்பன், பேசலாம். (குறுக்கீடு) இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது? ஒரு உறுப்பினரைக் கை நீட்டி அடித்துக் கொண்டிருக்கிறார் ஒருவர், அதை நான் அனுமதிக்க முடியுமா? திரு. சுந்தரதாஸ் (குறுக்கீடு). ஒரு உறுப்பினரைக் கை நீட்டி அடிப்பதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? காங்கிரஸ் கட்சி கொறடா அதற்கு பதில் சொல்லிவிட்டு வேறு ஏதாவது பேசுங்கள்.

பிற்பகல் 1.25

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரும் அடிக்கவில்லை சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவு செய்து யாரும் அடிக்கவில்லை என்று சொல்லாதீர்கள். திரு. சிங்காரத்தையும் மீறி, திரு. சின்னப்பனை அடிப்பதைப் பார்த்து, நான் உட்காருங்கள் என்று சொன்னதற்குப் பிறகு அடித்தாரா இல்லையா? அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? ஒரு உறுப்பினரைக் கை நீட்டி அடித்ததற்கு என்ன சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) அடித்ததற்கு நீங்கள் ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லலாம். மற்றவர்கள் உட்காரவும்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த உறுப்பினரையும், எந்த உறுப்பினரும் அடிப்பதற்கு உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது அடித்ததற்கு என்ன சொல்லுகிறீர்கள்? (குறுக்கீடு) அந்த உறுப்பினரை நான் அதற்காகத்தான் வெளியேற்றி இருக்கிறேன். அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? திரு. சின்னப்பன் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. சிங்காரம், என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? (குறுக்கீடுகள்)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களில் திரு. ச. அழகிரி, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம், திரு. ஆர். ஈஸ்வரன்,

திருமதி ஜீனத் சர்புதீன், திரு. கே. செல்வராஜ், திரு. ஆர்.சிங்காரம், திரு. கே. கே. சின்னப்பன், திரு. வே. கண்ணன் ஆகியோர் தவிர அவையிலிருந்து மற்றவர்கள் வெளிநடப்புச் செய்தனர்) *(குறுக்கீடுகள்)*

வேண்டாம், உட்காருங்கள் ஒரு உறுப்பினரை கை நீட்டி ஒருவர் அடிப்பார், அதை பார்த்துக் கொண்டு அவையினர் பேசாமல் இருக்கவேண்டும், என்கிறீர்களா? *(குறுக்கீடு)* வெளியேறுகிற உறுப்பினர்கள் அவையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தாமல் செல்ல வேண்டும். திரு. சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உறுப்பினர் சின்னப்பன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபோது, அருகிலே இருந்த பாலூர் சம்பத் அவர்கள் அவரை அடிக்க முயற்சித்தார். அடிக்க முயற்சித்தவுடன் நான் தடுத்தேன். தடுத்தவுடன் என்னையும் மீறி தள்ளிவிட்டு என்னையும் அடித்துவிட்டு, திரு சின்னப்பனையும் அடித்துவிட்டார். அதனை நீங்களும் கண்ணாலே பார்த்தீர்கள், அவையும் பார்த்துக் கொண்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆகவேதான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நடவடிக்கை எடுத்து வெளியேற்றியிருக்கிறேன். திரு. சின்னப்பன்.

**திரு கே. கே. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் வளாகத்திலே இருந்து பேரவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்துகிற வகையில் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்ற உறுப்பினர்களை அங்கிருந்தும் அப்புறப்படுத்த கேட்டுக் கொள்கிறேன். திரு. சின்னப்பன்.

**திரு. கே. கே. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் பேசிய கருத்துக்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூறினாலும் நான் கூறிய கருத்துக்கு அவர்கள்...... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காவலர்கள், வெளியிலே அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் செய்து கொண்டிருக்கின்ற உறுப்பினர்களை உடனடியாக அப்புறப்படுத்தலாம். தேவை இருப்பின் கூடுதல்

*1995 மார்ச் 30* ] [ பேரவைத் தலைவர் ]

காவலர்களைக் கொண்டு இப்படிப்பட்டவர்களை உடனடியாக அப்புறப்படுத்தலாம் (குறுக்கீடு). காவலர்களையும் அடிக்கிறார்கள் என்று சொன்னால் கடுமையான கிரிமினல் நடவடிக்கை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மீது எடுக்க வேண்டி வரும். காவலர்கள் மீது யாராவது கை வைத்தால் கடுமையான நடவடிக்கை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மீது எடுக்க வேண்டி வரும். உடனடியாக அப்புறப்படுத்தலாம். எவரேனும் காவலர்கள் மீது கை வைக்கிறார்கள் என்று சொன்னால், அது பற்றித் தகவல் கொடுத்தால், அந்த உறுப்பினர்கள் மீது உரிய கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும். திரு. சின்னப்பன்.

**திரு. கே. கே. சின்னப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் எதுவும் ஒரு புதிதான கருத்தைப் பேசவில்லை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் அதை மட்டும் சொல்லி முடிக்கலாம், மற்றவற்றுக்குப் போக வேண்டாம்.

**திரு. கே. கே. சின்னப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எங்களுடைய கட்சியினுடைய தலைவர் பேசிய கருத்தைத்தான் நான் இங்கே பேசினேன். ஆனால் இன்றைய தினம் அவர்களுடைய நடவடிக்கை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நான் பார்த்துக் கொள்கிறேன், உட்காருங்கள், திரு.எஸ்.வி. சண்முகம் (குறுக்கீடு) திரு. அழகிரி என்ன விளக்கம் சொல்லுகிறீர்கள்? இதிலே என்ன விளக்கம் இருக்கிறது? (குறுக்கீடு) சரி, அழகிரி.

*பிற்பகல் 1.30*

## 7. தாம் 29-3-1995-ஆம் நாளன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து உறுப்பினர் திரு. ச. அழகிரி விளக்கம் அளிக்க அனுமதி

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சட்டப் பேரவையில் நான் பேசிய விவாதத்தைப் பற்றி மீண்டும் இங்கே ஒரு விவாதம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அதிலே தலையிட்டுப் பேசியிருக்கிறார்கள். அரசியல் ரீதியாக